**கவனிக்க.**- 2025.10.17 ஆந் திகதிய 2459 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2460 - 2025 ඔක්තෝබර් මස 24 වැනි සිකුරාදා - 2025.10.24

2460 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1888 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1885 - B 82731- 403 (2025/10)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை – 2025

நாடு பூராகவும் உள்ள பிரதேச செயலகங்களில் வெற்றிடமாகக் காணப்படுகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு கிராம உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் வகையில் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் தோற்றுவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய பெண் / ஆண் ஆகிய இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. அத்தோடு அப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2025 திசெம்பர் மாதம் நடாத்தப்படும் என்பதையும் இத்தால் அறியப்படுத்தப்படும்.

02. விண்ணப்பதாரி ஒருவருக்கு கீழ்வரும் 06 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி தகைமை பெறுகின்ற பிரதேச செயலகப் பிரிவில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்க முடியும்.

03. பிரதேச செயலகப் பிரிவு மற்றும் குறித்த மாவட்ட மற்றும் உரிய மாகாணம் தொடர்பான தகவல்கள் I ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தாம் கோருகின்ற பிரதேச செயலகப் பிரிவு மற்றும் அதன் இலக்கம், மாவட்டத்தின் பெயர் மற்றும் இலக்கம், மாகாணத்தின் பெயர் மற்றும் இலக்கம் என்பனவும் அவ்வட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிவர்த்தியாக விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் குறிப்பிடல் வேண்டும். அதில் பிற்பட்ட காலங்களில் மாற்றங்களைச் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. அவ்விபரங்களைப் பிழையாக குறிப்பிடுவதன் காரணமாக விண்ணப்பதாரிக்கு ஏற்படும் ஏதேனும் பிரதிகூலங்கள் தொடர்பில் எவ்வித கோரிக்கைகளும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரிவின் இலக்கத்தைக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

04. **போட்டிப் பரீட்சை தொடர்பான விபரங்கள் :**

4.1 **பரீட்சை மொழி மூலம் :** இப்பரீட்சை சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் I ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத்தில் நடைபெறும். எனினும் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்குப் போதுமானளவு விண்ணப்பதாரி எண்ணிக்கையினர் விண்ணப் பித்திருக்காத மாவட்டங்களில் விண்ணப்பதாரிகள் கிட்டிய வேறு மாவட்டமொன்றில் உள்ள பரீட்சை நிலையத்தில் தோற்றுவதற்கு ஏற்படும். பரீட் சார்த்திகள் மொழி மூலம் ஒன்றில் மாத்திரம் தோற்றுதல் வேண்டும். கோருகின்ற மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

4.2 கிராம உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வ தற்கான போட்டிப் பரீட்சை, பின்வரும் மூன்று (03) வினாப் பத்திரங்களைக் கொண்டுள்ளது.

| | *பாடங்கள்* | *புள்ளி எண்ணிக்கை* | *சித்தியெய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச புள்ளிகளின் எண்ணிக்கை* | *காலம்* |
|---|---|---|---|---|
| 01. | மொழிப் பிரயோகம் மற்றும் நுண்ணறிவு | 100 | 40 | 1 1/2 மணித்தியாலம் |
| 02. | உள்நாட்டு மற்றும் உலகளாவிய போக்கு தொடர்பான பொது அறிவு | 100 | 40 | 1 1/2 மணித்தியாலம் |
| 03. | பொது உளச்சார்பு | 100 | 40 | 1 மணித்தியாலம் |

4.3 **எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம்:**

4.3.1 **மொழிப் பிரயோகம் மற்றும் நுண்ணறிவு:**

இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்தியின் கருத்துக் களின் வெளிப்பாடு, புரிந்துகொள்ளுதல், எழுத்துப்பிழை, மொழி மற்றும் கட்டுரை, கொடுக்கப்பட்ட கடிதத்தை வரைவு செய்தல், கொடுக்கப்பட்ட உரையை சுருக்கமாகக் கூறுதல், கொடுக்கப்பட்ட வாக்கியத்தின் கருத்தை ஒரே வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கணத்தைப் பயன்படுத்துதல் போன்ற அறிவை பரீட்சித்துப் பார்க்கும் விடயம் சார்ந்த வினாக்களைக் கொண்டமைந்திருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

4.3.2 **உள்நாட்டு மற்றும் உலகளாவிய போக்கு தொடர்பான பொது அறிவு:**

இந்த வினாத்தாள் நாட்டின் வரலாறு, புவி யியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியான முக்கிய தகவல்கள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நடப்பு விவகாரங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் பொது அறிவை அளவிட வடிவமைக்கப்பட்ட விடயம் சார்ந்த வினாக்களைக் கொண்டுள்ளது. சகல வினாக் களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

4.3.3 **பொது உளச்சார்பு**

இந்த வினா பத்திரம் பரீட்சார்த்திகளின் எண் கணித திறன்கள், சிக்கலைத் தீர்க்கும் திறன், முடிவெடுக்கும் திறன் மற்றும் பொது நுண்ணறிவு ஆகியவற்றை அளவிடும் வகையில் வடிவமைக்கப்பட்ட விடயம் சார்ந்த வினாக்களைக் கொண்டுள்ளது.

4.4 எழுத்துப் பரீட்சையில் அதிகூடிய புள்ளி களைப் பெறுகின்ற ஒழுங்கிற்கு ஏற்ப விண்ணப்ப தாரிகளுக்கு முன்னுரிமை வழங்கி ஒரு பாடத்தில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படுவார்கள்.

05. **ஆட்சேர்ப்பு முறை :**

(i) எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு மட்டத்திலும் அதிகூடிய புள்ளி களைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவினதும் வெற்றிட எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கு விண்ணப்பதாரிகளைக் கொண்ட எண் ணிக்கையினர் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சை மற்றும் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் மொத்த புள்ளிகளைப் பெறும் தகுதியான விண்ணப்பதாரிகள் அப்பிரதேச செயலகப் பிரிவின் வெற்றிட எண்ணிக்கையை நிரப்புவதற்காக பயிற்சி பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இதன்கீழ் பின்வரும் விதிவிலக்குகள் உள்ளடங்கும்.

(அ) ஒரு பிரதேச செயலகப் பிரிவில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் அளவை முழுமைப்படுத்துவதற்காக போதுமானளவு விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை அப்பிரதேச செயலகப் பிரிவில் தகுதியில்லாத போது அப்பிரதேச செயலகப் பிரிவு அமைந்துள்ள மாவட்டத் தில் பரீட்சையில் சித்தியெய்திய விண் ணப்பதாரிகள் மாவட்ட ரீதியான திறன் ஒழுங்கிற்கு ஏற்ப எஞ்சிய வெற்றிட எண் ணிக்கைகள் நிரப்பப்படும். (இதன் கீழ் இணைத்துக் கொள்வதற்காக வர்த்த மானி அறிவித்தலின் 6.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் “பிரதேச செயலகப் பிரிவில்” என்று “மாவட்டத் தினுள்” எனவும் கருதப்படும்.)

(ii) மேலே 5(i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்காக பின்வரும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.

(அ)

| *புள்ளி வழங்கப்படும் தலைப்புக்கள்* | *அதிகபட்ச புள்ளி அளவு* |
|---|---|
| தலைமைத்துவம் | 15 |
| விளையாட்டுத் திறன் | 05 |
| பிற அரசகரும மொழி அல்லது இணைந்த மொழித் தேர்ச்சி | 10 |
| கணினி அறிவு | 10 |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறன்கள் | 10 |
| மொத்தம் | 50 |

(ஆ) புள்ளி வழங்கும் போது அரச நிறுவனம்/ திணைக்களமொன்றினால் முறைசார்ந்த வகையில் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் உரிய விடயங்களை உறுதிப் படுத்துவது தொடர்பிலான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள அரச திணைக் களங்கள், நிறுவனங்களின் பதவிநிலை மட்ட உத்தியோகத்தர்களினால் வழங்கப் பட்டுள்ள உறுதிப்படுத்தும் கடிதத்தினை மாத்திரம் கருத்திற் கொள்ளப்படும். உதாரணமாக அறநெறிப் பாடசாலையின் ஆசிரியாக கடமையாற்றியிருத்தல், கிராம அபிவிருத்தி சங்கத்தில் பதவி வகித்தல், விளையாட்டுக்கழகத்தில் பதவி வகித்தல் போன்ற விடயங்கள் பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டி ருத்தல் வேண்டும்.

(இ) கிராம உத்தியோகத்தர்களுக்கு அரசியல் உரிமைகள் இல்லை என்பதால், அரசியல் மட்ட அமைப்புக்களில் பதவி வகித்தல் தொடர்பில் புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. உதாரண மாக, பிரதேச சபை / நகர சபை உறுப் பினர்கள், கூட்டுறவு சங்கங்களின் பணிப்பாளர் குழு உறுப்பினர்கள் போன்ற அரசியல் கட்சிகளை பிரதி நிதித்துவப்படுத்துவதினால் பெறக்கூடிய பதவிகளையும் குறிப்பிட முடியும்.

(iii) மூன்று மாதங்களைக் கொண்ட இப்பயிற்சிப் பாடநெறி மாவட்டச் செயலாளரின் மேற்பார் வையின் கீழ் நடாத்தப்படுகின்றதோடு, அப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாக மாவட்டச் செயலாளரினால் பரிந் துரைக் கப்படுபவர்கள் என்னால் இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் III ஆந் தரத்துக்கு நியமிக்கப்படுவார்கள். பயிற்சிக் காலத்தினுள் ரூபா 17,800.00 ஆன தொகை மாத்திரம் கொடுப்பனவாக செலுத்தப்படும் என்பதோடு அக்காலத்தினுள் விடுமுறை பெறுவதற்கு உரிமை

இல்லை. பாடநெறி நடாத்தப்படும் நாட்களில் குறைந்த பட்சம் 80% வரவு இருத்தல் வேண்டும். பயிற்சித் திட்டத்தின் கீழ் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்வதற்காக 50% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். அவ்வாறு மூன்று மாத கால பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்யாவிட்டால் அல்லது 31/91(1) மற்றும் 1991.09.24 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப தேசிய பாதுகாப்பு தகவல் பணியகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளும் பாதுகாப்பு குறித்து திருப்திகரமான பாதுகாப்பு தடைநீக்கச் சான்றிதழைப் பெற தவறினால் அல்லது இந்த பயிற்சியைப் பெறும் உத்தியோகத்தரின் சேவை முடிவுறுத்தப்படும். இந்த மூன்று மாதகாலப் பயிற்சிக் காலம் சேவைக் காலத்துடன் சேர்க்கப்பட மாட்டாது என்பதுடன் அக்காலம் ஓய்வூதியப் பிரமாண ஏற்பாடுகளின் கீழ் ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதற்காக மாத்திரம் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படுகின்றது.

(iv) தகுதி ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலை அடிப் படையாகக் கொண்டு நியமனம் வழங்கப்பட்டால், இறுதி வெற்றிடம் அல்லது ஒருசில இறுதி வெற்றிடங்களுக்கு அல்லது சமனான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் அதிக எண்ணிக் கையில் இருந்தால், அவ்வெற்றிடத்தை அல்லது வெற்றிடங்கள் சிலவற்றை அல்லது நிரப்புவது தொடர்பில் என்னால் அரசாங்க சேவை ஆணைக் குழுவிடம் கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எடுக் கப்படும்.

06. விண்ணப்பதாரிகளிடம் இருக்க வேண்டிய தகைமைகள்: பரீட்சார்த்திகள் குறைந்தபட்சம் கீழே காட்டப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு உடன்முன்னரான ஆறு (06) வருட காலத்தினுள் பரீட்சார்த்தி தான் பதவியை ஏற்பதற்கு எதிர்பார்க்கும் பிரதேச செயலகப் பிரிவினுள் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் தொடர்ச்சியாக நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும். இதுபற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள சன்றிதழ்களின் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

1. வாக்காளர் பெயர்ப் பட்டியல்
2. கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ்

6.2 வயதெல்லை - விண்ணப்பதாரி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதிக்கு 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும். (அதன்படி 2004.11.17 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் 1990.11.17 ஆந் திகதிக்கு அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியுள்ளவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்க தகுயான வர்களாவர்.)

6.3 **கல்வித் தகைமைகள்** : விண்ணப்பதாரிகளுக்கு கீழ்வரும் வகையில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) முதன் மொழியாக சிங்களம் அல்லது தமிழ் மொழிகளில் ஒரு மொழிப் பாடத்துடன் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே தடவையில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தி யடைந்திருத்தல்;

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் சகல பாடங்களிலும் (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பழைய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.

6.4 **பரீட்சார்த்திகள் :**

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும;
2. குற்றவியல் செயற்பாடு தொடர்பாக நீதி மன்றத்தில் குற்றவாளியாக தண்டனை பெற்றி ருக்காதிருத்தல். அத்தோடு, மிகச் சிறந்த நடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்;
3. அரச அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச நியதிச் சட்ட நிறுவனமொன்றிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவர், சேவையை விட்டு விலகியவர் அல்லது வினைத்திறனின்மை காரணமாக ஓய்வு பெறச் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது ;
4. வகையற்ற நிலைக்கு உட்பட்டுள்ளவராக இல்லாதிருத்தல் வேண்டும்;
5. ஏதேனும் ஒரு மதத்தின் அல்லது சமயப் பிரிவின் மதகுருவாக இருத்தல் கூடாது;
6. இப்பரீட்சைக்கு விசேட தேவையுடையவர்கள் விண்ணபித்திருப்பின், அதுபற்றி விண்ணப்பப் படிவத்தில் கட்டாயமாக குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பதோடு, குறித்த மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகளையும் விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதிகளுடன் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

07. **பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள முறை :**

**சம்பள அளவுத்திட்டம்** - ரூபா. 50,630–10X540-11X630-10X1010-10X1190-ரூபா.84.960 ஆகும்.

(இலக்கம் 10/2025 மற்றும் 2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை அட்டவணை (ii) இன் ஏற்பாடுகளின் படி கொடுப்பனவுகள் மேற் கொள்ளப்படும்.)

08. **சேவை நிபந்தனைகள்:**

8.1 ஆட்சேர்ப்பு நடைபெறுவது இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் III ஆந் தரத்திற்காகும்.

8.2 இந் நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியத்திட்டத் தைக் கொண்டுள்ளதுள்ளதுமாகும். ஓய்வூதியத் திட்டமானது அரசாங்கத்தினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங் களுக்கு உட்பட்டதாகும். விதவைகள் அநாதைகள்/ தபுதாரர்கள் நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். மூன்று மாத (03) பயிற்சிக் காலம் கிராம உத்தியோகத்தர் சேவைக் காலத்துடன் கணக்கிடப்படுவதில்லை.

8.3 முதல் நியமனத் திகதி முதல் மூன்று வருடங்களுக்கு நியமிக்கப்படும் பிரதேச செயலகப் பிரிவினுள் கட்டாயம் சேவையாற்றல் வேண்டும்.

8.4 கிழமையில் ஒரு நாள் விடுமுறை தினமாக வழங்கப்படும் என்பதோடு, அத்தினம் தவிர்ந்த ஏனைய வார நாட்களில் 24 மணித்தியாலங்களும் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படும் கிராம உத்தியோகத்தர் அப்பிரிவினுள் தங்களது கடமைகளைச் செய்வதற்கு கட்டுப்பட்டுள்ளார்.

8.5 இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒருவர் அங்கீ கரிக்கப்பட்ட சேவைப் பிரமாணம், அரச சேவை ஆணைக்குழுவின் ஒழுங்கு விதி, தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் நிபந்தனை களுக்கும் அரசினால் விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்வரும் காலங்களில் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கும் உட்பட்ட வராவார்.

09. **விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முறை :**

9.1 விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத் தளத்தில் “Our Services” என்பதன் கீழ் Online Application – Recruitment Exams/ EB Exam” மூலம் வெளியிடப்பட்டுள்தோடு, விண்ணப்பங்களை நிகழ்நிலை மூலமாக (Online) ஊடாக மாத்திரமே அனுப்பப்படுதல் வேண்டும். இணையவழி ஊடான விண்ணப்பங்கள், ஏற்றுக்கொள்ளப்படுவது 2025 ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 2025, நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி மு.ப. 09.00 மணியுடன் முடிவடைகின்றது.

9.2 தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவை யில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பங்களின் பிரதிகளை தமது பிரத்தி யேகக் கோவையினுள் சேர்ப்பதற்காக தங்களது நிறுவனத் தலைவர்களிடம் கையளித்தல் வேண்டும் என்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது நிறுவனத் தலைவரினால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியை அல்லது சேவையை உறுதிப்படுத்திய கடிதத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

9.3 விண்ணப்பங்களை இறுதி திகதி வரை தாமதித்து அனுப்புகின்ற விண்ணப்பதாரிகள் அதனால் எந்தவொரு தீங்கான நிலைமைக்கும் உள்ளாகலாம் அதனை அவரே பொறுப்பேற்றுக்கு கொள்ள வேண்டும்.

9.4 நிகழ்நிலை (Online) பரீட்சைக்கான விண்ணப் பத்தை ஆங்கில மொழியில் மாத்திரம் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மென் பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவம் என திணைக்களத்தினால் ஏற்றுகொள்ளப்பட்டதாகவும்/ ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனவும் தரவுத் தளத்தினுள் பிரவேசிப்பதற்கு பயன்படுத்துகின்ற கையடக்கத் தொலை பேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அல்லது அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கு முன்னர் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பத்திர த்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தை நிரப்பும்போது அவ்வறிவுறுத்தல்களை கட்டாயமாக பின் பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதியை பெற்றுக்கொண்டதன் பிற்பாடு அதில் மேற்கொள் ளப்படுகின்ற எந்தவொரு திருத்தங் களும் செல்லுபடியாகும் திருத்தங்களாக கருத் திற் கொள்ளப்பட மாட்டாது. முழுமையற்ற விண்ணப் பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

9.5 பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000 அறவிடப்படும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது நிகழ்நிலை அமைப்பினால் வழங்கப்படும் பின்வரும்

கட்டண செலுத்துகை முறைமையின் கீழ் மாத்திரம் செலுத்தப்படுதல் வேண்டும்.

I. எந்தவொரு வங்கியினதும் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

II. வலையமைப்பு கட்டண முறையுடன் கூடிய எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

III. இலங்கை வங்கி இணையவழி வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)

IV. எந்தவொரு இலங்கை வங்கி கிளையின் மூலம் ( Any Branch of the Bank of Ceylon)

(அ) மேற்படி முறைமை மூலம் கட்டணம் செலுத்தும் விதம் பற்றிய அறிவுறுத் தல்கள் இணையத்தளத்தின் பரீட்சைக்கு உரித்தான தொழில்நுட்ப அறிவுறுத்தல் களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுஞ் செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையையும் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்ட ணத்தைக் குறைவாக அல்லது கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற் கூறப்பட்ட கொடுப்பனவு முறை மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படு கின்ற ஏதேனும் ஒரு கோளாறு தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது.

(இ) பரீட்சைக்கு செலுத்தப்படுகின்ற தொகை எவ்விதக் காரணம் கொண்டும் மீளச் செலுத்தல் அல்லது மற்றொரு பரீட்சை நிமித்தம் மாற்றுதல் மேற்கொள்ளப்பட மாட்டாது.

10. பரீட்சைக்கு தோற்றுதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல்.

10.1. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனு மொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை பொருத்தவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்ப தாரிகள் பரீட்சை மண்பத்தினுள் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

10.2 பரீட்சார்த்தி தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்கு தோற்றும்சகல பரீட்சார்த்திகளும் பரீட்சைதினத்தில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திய பரீட்சை அனுமதிப் பத்திரத்தை மண்டப் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். தனது பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழக்கப்பட மாட்டார்கள்.

10.3 பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்ப தாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு அரச நிறுவனத்தினால் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரி ஒருவர்தனதுகையொப்பத்தைநிறுவனத்தலைவரின் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினாலும், அவ்வாறில்லாத விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை பிரிவின் கிராம உத்தியோத்தர், அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், உறுதிமொழி ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத் தாரிசு அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தலைமைப் பிக்கு அல்லது பிற மதத்தின் புனிதஸ்தலத்தின் பொறுப்பாளர் அல்லது மத குருக்கள் எனக் கருதப்படுகின்ற நிலையை வகிக்கும் ஒருவர் அல்லது அவர்களைக் கொண்டு சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

10.3. **பரீட்சை பெறுபேறுகளை வெளியிடல் :**

வர்த்தமானி அறிவித்தல் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம் எழுத்துப் பரீட்சையில் தகைமை பெற்ற வர்களின் பெயர்ப் பட்டியல் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்காக பிரதேச செயலகப் பிரிவு களில் நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப வெவ்வேறாக செயலாளர், பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச் சிடம் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையின் புள்ளிகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமை பெற்றுள்ள எல்லா விண்ணப்பதாரர்களின் எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்கிற்கு ஏற்ப பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தயார்படுத்தப்பட்டுள்ள பெறு பேற்றுப் பட்டியல் செயலாளர், பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச் சுக்கு வழங்கப்படும்.

பின்னர், வர்த்தமானி அறிவித்தலின் 05.(i) இன் (அ) மற்றும் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம் எழுத்துப் பரீட்சையில் தகைமை பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்காக மாவட்ட மட்டத்தில் நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப வெவ்வேறாக செயலாளர், பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையின் புள்ளிகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் நேர்முகப் பரீட்சைக்குத் தகைமை பெற்றுள்ள எல்லா விண்ணப்பதாரர்களின் எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமைக்கு ஏற்ப பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தயார்படுத்தப்பட்ட பெறுபேற்றுப் பட்டியல் மாவட்ட, பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்தி களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அனுப்புவதற்கு அல்லது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் அறிவித்தலுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

11. சகல பரீட்சார்த்திகளும் அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள பரீட்சை சட்ட திட்டங்கள் தொடர்பில் அறிந்திருத்தல் வேண்டும் என்பதோடு அவற்றைப் பின்பற்றியொழுகுவதற்கும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் திணிக்கப்படும் சட்டதிட்டங்களிற்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச்சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

12. பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்று வதற்கான தகைமை கொண்டவர் எனக் கருதப்பட மாட்டார். அத்தோடு பிழையான மற்றும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டு ஏதேனும் பிரதிகூலங்கள் ஏற்படின் அதனைப் பரீட்சார்த்தியே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறான விடயங்களுக்கு எந்தவொரு கோரிக்கைகளும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

13. இலக்கம் அமை/25/0855/802/004-IV ஆம் மற்றும் 2025.05.26 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத் தின் படி அந்தந்த பிரதேச செயலகப் பிரிவு மட்டங் களில் கணக்கிடப்பட்டுள்ள வெற்றிடங்களின் அள வினை நிரப்புவதற்காக இந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுவதோடு, ஆட்சேர்ப்புச் செய்யும் திகதியாகும் போது வருடாந்த இடமாற்றங்கள் மற்றும் ஏனைய இடமாற்றங்கள் காரணமாக 1 ஆம் அட்ட வணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருசில பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் முழுமைப்படுத்துவதற்கு வாய்ப்புக் காணப்படுவதால் இதுகுறித்து பரீட்சார்த்திகளின் அவதானத்துக்கு கொண்டு வரப்படுகின்றது. அவ்வாறான பிரதேச செயலகப் பிரிவுகளில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகள் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யும் போது வேறு பிரதேச செயல கங்களில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக தகைமை பெற மாட்டார்கள் என்பதனையும் கவனத்திற் கொள்ளவும்.

14. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப் பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக் குட்பட்ட, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி நிவர்த்தியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணபதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இணையவழி ஊடாக மாத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப் பட்டவுடன் அது பற்றி குறிப்பிட்டு இணையத் தளத்தில் அறிவித்தலொன்றின் மூலம் / விண்ணப்ப தாரிகளுக்கு குறுஞ்செய்தியொன்றின் மூலம் அறிவிக்கப்படும். தமக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அது குறித்து இலங்கை பரீட்சை திணைக்களத்தின் நிறுவன மற்றும் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்ப தாரி தான் தோற்றுகின்ற பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை நிவர்த்தியாக குறிப்பிட்டு அதனுடன் வேண்டுகோள் கடிதத்தையும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரித்துக் கொள்வது சாலவும் சிறந்தது. அவ்வாறு கோரும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள முழுமைப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். அனுமதி அட்டையை பரிசீலித்து ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் நேரகாலத்தோடு பரீட்சைகள் திணைக் களத்தை தொடர்புகொண்டு விண்ணப்பத்திற்கு ஏற்ப குறித்த திருத்தத்தை மேற்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் /நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்களுக்கான கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

15. இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் ஏதேனும் ஒரு மொழியில் முன்பின்னான முரண்பாடுகள் ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பங் களில் சிங்கள மொழியிலான அறிவித்தலே வலுவிலான தாகவிருக்கும்.

16. இவ்வறிவித்தல் மூலம் வெளியிடப்படாத ஏதேனும் ஒருவிடயம் காணப்படின் அதுகுறித்து முடிவெடுக்கும் உரிமை பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கே உரித்துடையதாகும்.

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

"நில மெதுர", எல்விடிகல மாவத்தை,
கொழும்பு 05,
2025.10.16.

**அட்டவணை I**

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| கொழும்பு | 1103 | 01 கொழும்பு | 01 மேல் மாகாணம் |
| கொலன்னாவ | 1106 | | |
| கடுவெல | 1109 | | |
| ஹோமாகம | 1112 | | |
| சீதாவக (ஹங்வெல்ல) | 1115 | | |
| பாதுக்க | 1118 | | |
| மஹரகம | 1121 | | |
| ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை | 1124 | | |
| திபிரிகஸ்யாய | 1127 | | |
| தெஹிவலை | 1130 | | |
| இரத்மலானை | 1131 | | |
| மொரட்டுவ | 1133 | | |
| கஸ்பேவ | 1136 | | |
| நீர்கொழும்பு | 1203 | 02 கம்பஹா | |
| கட்டான | 1206 | | |
| திவுலபிடிய | 1209 | | |
| மீரிகம | 1212 | | |
| மினுவன்கொடை | 1215 | | |
| வத்தளை | 1218 | | |
| ஜா எல | 1221 | | |
| கம்பஹா | 1224 | | |
| அத்தனகல்ல | 1227 | | |
| தொம்பே | 1230 | | |
| மஹர | 1233 | | |
| களணி | 1236 | | |
| பியகம | 1239 | | |
| பானந்துறை | 1303 | 03 களுத்துறை | |
| பண்டாரகம | 1306 | | |
| ஹொரண | 1309 | | |
| இங்கிரிய | 1310 | | |
| புலத்சிங்கள | 1312 | | |
| மதுராவல | 1315 | | |
| மில்லனிய | 1318 | | |
| களுத்துறை | 1321 | | |
| பேருவளை | 1324 | | |
| தொடங்கொட | 1327 | | |
| மதுகம | 1330 | | |
| அகலவத்தை | 1333 | | |
| பாலிந்தநுவர | 1336 | | |
| வலள்ளாவிட | 1339 | | |

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| தும்பனே | 2103 | 04 கண்டி | 02 மத்திய மாகாணம் |
| பூஜாபிடிய | 2106 | | |
| அகுரணை | 2109 | | |
| பன்வில | 2115 | | |
| உடுதும்பர | 2118 | | |
| மினிபே | 2121 | | |
| மெததும்பர | 2124 | | |
| குண்டசாலை | 2127 | | |
| ககவெட கோரளை | 2130 | | |
| ஹரிஸ்பத்துவ | 2133 | | |
| ஹதரலியத்த | 2134 | | |
| யடிநுவர | 2136 | | |
| உடுநுவர | 2139 | | |
| தொலுவ | 2142 | | |
| பாதஹெவாஹெட | 2145 | | |
| தெல்தொட்டை | 2148 | | |
| உடபலாத | 2151 | | |
| கக இஹல கோரலை | 2154 | | |
| பஸ்பாகே கோரலை | 2157 | | |
| கலேவெல | 2203 | 05 மாத்தளை | |
| தம்புள்ள | 2206 | | |
| நாஉல | 2209 | | |
| பல்லேபொல | 2212 | | |
| யடவத்த | 2215 | | |
| மாத்தளை | 2218 | | |
| அபன்கக கோரலை | 2221 | | |
| லக்கல பல்லேகம | 2224 | | |
| வில்கமுவ | 2227 | | |
| ரத்தொட | 2230 | | |
| உகுவெல | 2233 | | |
| கொத்மலை | 2303 | 06 நுவரெலியா | |
| கொத்மலை(மேற்கு) | 2304 | | |
| ஹகுரன்கெத | 2306 | | |
| மதுரட்ட | 2307 | | |
| வலபனே | 2309 | | |
| நில்தன்தகின்ன | 2310 | | |
| தலவகலே | 2313 | | |
| நோர்வூட் | 2316 | | |

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| பென்தொடை | 3103 | 07 காலி | 03 தென் மாகாணம் |
| பலபிடிய | 3106 | | |
| கரன்தெணிய | 3109 | | |
| எல்பிடிய | 3112 | | |
| நியாகம | 3115 | | |
| நெலுவ | 3121 | | |
| நாகொடை | 3124 | | |
| பத்தேகம | 3127 | | |
| வட்டுரம்ப | 3128 | | |
| வெலிவிடிய திவிதுர | 3130 | | |
| அம்பலன்கொடை | 3133 | | |
| மடம்பகம | 3138 | | |
| கடவத்சதர | 3139 | | |
| போபே பொந்தல | 3142 | | |
| அக்மீமன | 3145 | | |
| யக்கலமுல்ல | 3148 | | |
| இமதுவ | 3151 | | |
| கோனபீனுவல | 3154 | | |
| ஹபராதுவ | 3157 | | |
| பிடபெத்தர | 3203 | 08 மாத்தறை | |
| கொடபொல | 3206 | | |
| பஸ்கொடை | 3209 | | |
| முலடியன | 3212 | | |
| அதுரலிய | 3215 | | |
| அகுரஸ்ஸ | 3218 | | |
| வெலிபிடிய | 3221 | | |
| மாலிம்பட | 3224 | | |
| கபுருபிடிய | 3227 | | |
| ஹக்மன | 3230 | | |
| கிரிந்த புஹுலுவெல்ல | 3233 | | |
| வெலிகம | 3239 | | |
| மாத்தறை | 3242 | | |
| தேவிநுவர | 3245 | | |
| சூரியவெவ | 3303 | 09 ஹம்பாந்தோட்டை | |
| லுணுகம்வெஹெர | 3306 | | |
| திஸ்ஸமஹாராம | 3309 | | |
| ஹம்பாந்தோட்டை | 3312 | | |
| அம்பலன்தொடை | 3315 | | |
| அகுணகொல பெலஸ்ஸ | 3318 | | |
| வீரகெடிய | 3321 | | |
| கடுவன | 3324 | | |
| ஒகேவெல | 3327 | | |
| பெலிஅத்த | 3330 | | |
| தங்கல்ல | 3333 | | |
| வலஸ்முல்ல | 3336 | | |

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| கைட்ஸ் | 4103 | 10 யாழ்ப்பாணம் | 04 வட மாகாணம் |
| சங்கானை | 4106 | | |
| சந்திலிப்பாய் | 4109 | | |
| தெல்லிப்பளை | 4112 | | |
| உடுவில் | 4115 | | |
| கோப்பாய் | 4118 | | |
| கரவெட்டி | 4121 | | |
| மருதன்கேர்னி | 4124 | | |
| பருத்தித்துறை | 4127 | | |
| சாவகச்சேரி | 4130 | | |
| நல்லூர் | 4133 | | |
| யாழ்ப்பாணம் | 4136 | | |
| வேலனை | 4139 | | |
| காரைநகர் | 4145 | | |
| மன்னார் | 4203 | 11 மன்னார் | |
| மாந்தை மேற்கு | 4206 | | |
| மடு | 4209 | | |
| நானாட்டான் | 4212 | | |
| முசலி | 4215 | | |
| வவுனியா வடக்கு | 4303 | 12 வவுனியா | |
| வவுனியா தெற்கு | 4306 | | |
| வவுனியா | 4309 | | |
| வெண்கலசெட்டிக்குளம் | 4312 | | |
| துனுக்காய் | 4403 | 13 முல்லைத்தீவு | |
| மாந்தை கிழக்கு | 4406 | | |
| புதுக்குடியிருப்பு | 4409 | | |
| ஒட்டுசுட்டான் | 4412 | | |
| கரைதுறைப்பற்று | 4415 | | |
| வெலிஓய | 4418 | | |
| கரச்சி | 4509 | 14 கிளிநொச்சி | |
| பூநகரி | 4512 | | |

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| கோரளைப்பற்று வடக்கு | 5103 | 15 மட்டக்களப்பு | 05 கிழக்கு மாகாணம் |
| ஏறாவூர்பற்று | 5112 | | |
| மண்முனை வடக்கு | 5118 | | |
| மண்முனை மேற்கு | 5121 | | |
| காத்தான்குடி | 5124 | | |
| மண்முனைப்பற்று | 5127 | | |
| மண்முனை தென்மேற்கு | 5130 | | |
| போரதீவுப்பற்று | 5133 | | |
| மண்முனை தெற்கு | 5136 | | |
| கோரலைப்பற்று தெற்கு | 5139 | | |
| தெஹிஅத்த கண்டிய | 5203 | 16 அம்பாறை | |
| உஹன | 5212 | | |
| நாவிதன்வெளி | 5216 | | |
| சம்மாந்துறை | 5218 | | |
| கல்முனை | 5224 | | |
| சாய்ந்தமருது | 5225 | | |
| அக்கரைப்பற்று | 5236 | | |
| ஆலயடிவேம்பு | 5239 | | |
| தமன | 5242 | | |
| திருக்கோவில் | 5245 | | |
| பொத்துவில் | 5248 | | |
| குச்சவேலி | 5306 | 17 திருகோணமலை | |
| கோமரன்கடவல | 5309 | | |
| மொரவெவ | 5312 | | |
| பட்டினமும் சூழலும் கடவத் சத்தர | 5315 | | |
| தம்பலகாமம் | 5318 | | |
| கந்தளாய் | 5321 | | |
| கிண்ணியா | 5324 | | |
| மூதூர் | 5327 | | |
| சேருவில | 5330 | | |

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| கிரிபாவ | 6103 | 17 குருணாகல் | 06 வடமேல் மாகாணம் |
| கல்கமுவ | 6106 | | |
| எஹடுவெவ | 6109 | | |
| அம்பன்பொல | 6112 | | |
| ரஸ்நாயகபுர | 6118 | | |
| நிக்கவெரடிய | 6121 | | |
| மஹவ | 6124 | | |
| பொல்பிதிகம | 6127 | | |
| இப்பாகமுவ | 6130 | | |
| கனேவத்த | 6133 | | |
| வாரியபொல | 6136 | | |
| கொபேகனே | 6139 | | |
| பிங்கிரிய | 6142 | | |
| பமுணாகொடுவ | 6149 | | |
| மாஸ்பொத | 6151 | | |
| குருநாகல் | 6154 | | |
| மல்லவபிடிய | 6157 | | |
| மாவதகம | 6160 | | |
| ரிதீகம | 6163 | | |
| வீரம்புகெதர | 6166 | | |
| குளியாபிட்டிய - கிழக்கு | 6169 | | |
| குளியாபிடிய - மேற்கு | 6172 | | |
| உடுபத்தாவ | 6175 | | |
| பன்னல | 6178 | | |
| நாரம்மல | 6181 | | |
| அலவ்வ | 6184 | | |
| பொல்கஹவெல | 6187 | | |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 6190 | | |
| பண்டுவஸ்நுவர மேற்கு | 6193 | | |
| கல்பிட்டி | 6203 | 19 புத்தளம் | |
| வனாதவில்லு | 6206 | | |
| கருவெலகஸ்வெவ | 6209 | | |
| நவகத்தேகம | 6212 | | |
| புத்தளம் | 6215 | | |
| முந்தளம் | 6218 | | |
| மஹகுபுக்கடவல | 6221 | | |
| ஆணமடுவ | 6224 | | |
| பல்லம | 6227 | | |
| ஆரச்சிகட்டுவ | 6230 | | |
| சிலாபம் | 6233 | | |
| மாதம்பே | 6236 | | |
| மஹவெவ | 6239 | | |
| நாத்தாண்டி | 6242 | | |
| வென்னப்புவ | 6245 | | |
| தங்கொட்டுவ | 6248 | | |

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| கெபிதிகொல்லாவ | 7106 | 20 அநுராதபுரம் | 07 வட மத்திய மாகாணம் |
| மெதவச்சி | 7109 | | |
| மஹவிலச்சிய | 7112 | | |
| நுவரகம்பலாத மத்திய | 7115 | | |
| ரபேவ | 7118 | | |
| கஹடகஸ்திகிலிய | 7121 | | |
| ஹெரவ்பதான | 7124 | | |
| கலென்பிந்துனுவெவ | 7127 | | |
| மிஹிந்தளை | 7130 | | |
| நுவரகம்பலாத கிழக்கு | 7133 | | |
| நாச்சியாதீவு | 7136 | | |
| நொச்சியாகம | 7139 | | |
| இராஜாங்கனை | 7142 | | |
| தம்புத்தேகம | 7145 | | |
| தலாவ | 7148 | | |
| திரப்பனே | 7151 | | |
| கெகிராவ | 7154 | | |
| பளுகஸ்வெவ | 7157 | | |
| இபலோகம | 7160 | | |
| கல்நேவ | 7163 | | |
| பலாகல | 7166 | | |
| ஹிங்குரக்கொடை | 7203 | 21 பொலன்னறுவை | |
| மெதிரிகிரிய | 7206 | | |
| லங்காபுர | 7209 | | |
| வெலிகந்த | 7210 | | |
| திம்புலாகலை | 7212 | | |
| தமன்கடுவை | 7215 | | |
| எலஹர | 7218 | | |

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| மஹியங்கனை | 8103 | 22<br>பதுளை | 08<br>ஊவா மாகாணம் |
| ரிதீமாலியத்த | 8106 | | |
| மீகஹகிவுல | 8109 | | |
| சொரணாதொட்ட | 8115 | | |
| பஸ்ஸர | 8118 | | |
| லுணுகல | 8119 | | |
| பதுளை | 8121 | | |
| ஹாலிஎல | 8124 | | |
| ஊவ பரணகம | 8127 | | |
| வெலிமடை | 8130 | | |
| பண்டாரவளை | 8133 | | |
| எல்ல | 8136 | | |
| அப்புத்தளை | 8139 | | |
| ஹல்தும்பல | 8142 | | |
| பிபிலை | 8203 | 23<br>மொணராகலை | |
| மடுல்ல | 8206 | | |
| மெதகம | 8209 | | |
| சியம்பலாண்டுவ | 8212 | | |
| மொணராகலை | 8215 | | |
| படல்குபுர | 8218 | | |
| வெல்லவாய | 8224 | | |
| கதிர்காமம் | 8227 | | |

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| எஹலியகொடை | 9103 | இரத்தினபுரி 24 | 09 சப்ரகமுவ மாகாணம் |
| குருவிட | 9106 | | |
| இரத்தினபுரி | 9112 | | |
| இம்புல்பே | 9115 | | |
| ஓபநாயக | 9121 | | |
| பெல்மடுல்ல | 9124 | | |
| நிவிதிகல | 9136 | | |
| கஹவத்த | 9139 | | |
| கொடகவெல | 9142 | | |
| எம்பிலிப்பிடிய | 9148 | | |
| கொலொன்ன | 9151 | | |
| கல்தோட்ட | 9154 | | |
| ரம்புக்கன | 9203 | கேகாலை 25 | |
| மாவனல்லை | 9206 | | |
| அரணாயக | 9209 | | |
| கேகாலை | 9212 | | |
| கலிகமுவ | 9215 | | |
| வரகாபொல | 9218 | | |
| புலத்கொஹுபிடிய | 9224 | | |
| யடியந்தொட்டை | 9227 | | |
| தெரணியகல | 9233 | | |

## அட்டவணை II

### இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் விபரமான புள்ளி வழங்கும் நடைமுறை

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட தகைமைகள் தொடர்பில் மற்றும் அதற்குரித்தான சான்றிதழ்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சையின் போது கவனத்திற் கொள்ளப்படும். தொடர்புடைய சான்றிதழ்கள் உரிய வகையில் குறித்த காலப்பகுதியினுள் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

1. **தலைமைத்துவம் :** (பாடசாலை மற்றும் சமூக தலைமைத்துவம்) அதிபட்சம் - 15 புள்ளிகள்

1.1 பாடசாலை மட்டத்தில் :

| *புள்ளி வழக்கப்பட முடியுமான துறைகள்* | *அதிகபட்ச புள்ளி அளவு* |
|---|---|
| பாடசாலை மாணவத் தலைவர் | 05 |
| விளையாட்டுத் தலைவர் | 05 |
| சாரணர்/மாணவர் படையணி/ செஞ்சிலுவை ஆகிய குழுக்களின் தலைமைத்துவம் வகித்தல் | 05 |

1.1.1 பாடசாலை செயல்பாடுகள் / தலைமைத்துவத் திற்கான ஒரு பதவிக்கு ஒரு முறை மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். ஒரு சங்கத்தில் பல சந்தர்ப்பங்களில் வெவ்வேறு பதவிகளை வகித்தல் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

1.1.2 பாடசாலைத் செயல்பாடுகள் அல்லது தலைமைத் துவம் பற்றி அதிபரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

1.1.3 ஒரு பதவிக்கு 05 புள்ளிகள் மாத்திரமே உரித்தாகும்.

1.1 **சமூக மட்டம் :**

| *புள்ளி வழக்கப்பட முடியுமான துறைகள்* | *அதிகபட்ச புள்ளி அளவு* |
|---|---|
| பிரதேச செயலகம்/மாவட்ட செயலகம் அல்லது அரச நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட அரசியல் சாராத அமைப்பு/ சங்கத்தின் முக்கிய பதவிகளுக்கு (தலைவர், செயலாளர், பொருளாளர்) | 05 |
| 05 ஒரு அறநெறிப் பாடசாலையில் குறைந்தபட்சம் ஒரு வருட காலம் ஆசிரியராக சேவையாற்றியிருத்தல். | 05 |

1.2.1 ஒரு சங்கத்தில் பல சந்தர்ப்பங்களில் அல்லது ஒரே நேரத்தில் பல பதவிகள் வகித்திருந்தால், ஒரு பதவிக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.

1.2.2 ஒரு பதவிக்கு 05 புள்ளிகள் மாத்திரமே உரித்தாகும்.

1.2.3 இந்தப் பதவிகளை வகித்ததாக சம்பந்தப்பட்ட பதிவு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

1.2.4 ஒரு வருடம் ஒரு அறநெறிப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றியிருத்தல். (பிரதேச செயலாளர் அல்லது பிரதேச செயலகத்தின் தொடர்புடைய உத்தியோகத்தரினால் அவரின் உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரையுடன் சான்றுப்படுத்துதல் வேண்டும்)

1.2.5 குறித்த அமைப்பு / சங்கம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தாக பதிவுச் சான்றிதழ் அல்லது கடிதத் தலைப்பில் பதிவு செய்யப்பட்ட அதிகாரசபை மற்றும் பதிவு இலக்கத்தினைக் குறிப்பிட்டு சான்றுப்படுத்துதல் வேண்டும்.

2. **விளையாட்டுத்திறன்** : அதிகபட்சம் 05 புள்ளிகள் (பாடசாலை, பிரதேச/ மண்டல/ வலய மற்றும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளுக்கு புள்ளி வழங்குதல், அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்கள்/ இளைஞர் சங்க விளையாட்டுப் போட்டி களுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். புத்தாண்டு விழாக்கள் போன்ற சந்தர்ப்பங்களில் நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

- பெற்ற சாதனைகள், அந்த நேரத்தில் வழங்கப் படும் சான்றிதழ்களினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பதோடு கடிதங்கள் மூலம் செய்யப்படும் உறுதிப்படுத்தல்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒன்றுக்கொன்று வித்தியாசமான போட்டி களுக்கு தனித்தனியான புள்ளிகள் வழங்கப்படும்.
- ஒரு போட்டி அதன் அதிகபட்ச திறமைக்கு ஒரு முறை மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.
- முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங் களுக்கு மட்டுமே சாதனைகளாகக் கருதப்படும்.

2.1. **பாடசாலை :**

| *அடைவுகள்* | *புள்ளி அளவு* |
|---|---|
| பாடசாலை மட்டத்தில் (இல்ல விளையாட்டுப் போட்டி) சாதனை | 01 |
| பிரிவு மட்டத்தில் சாதனை | 02 |
| வலய மட்டத்தில் சாதனை | 03 |
| மாகாண மட்டத்தில் சாதனை | 04 |
| அகில இலங்கை மட்டத்தில் சாதனை | 05 |

2.2. **விளையாட்டுக் கழகம்/ இளைஞர் சங்கம் :**

| *அடைவுகள்* | *புள்ளி அளவு* |
|---|---|
| பிரதேச மட்டத்தில் சாதனை | 02 |
| மாவட்ட மட்டத்தில் சாதனை | 03 |
| மாகாண மட்டத்தில் சாதனை | 05 |
| தேசிய மட்டத்தில் சாதனை | 05 |

3. **மொழித் தேர்ச்சி :** அதிபட்சம் - 10 புள்ளிகள்

3.1 தாய்மொழிக்கு மேலதிகமாக, மற்றைய அரசகரும மொழி மற்றும் இணைந்த மொழித் தேர்ச்சிக்காக (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) வழங்கப்பட்டுள்ள பின் வரும் தேர்ச்சிகளுக்கு புள்ளிகள் உரித்தாகும்.

3.2 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனம் அல்லது மொழிக் கல்விக்கு பொறுப்பான அரச நிறுவனம்/ திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள சான்றி தழ்கள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படும்.

| *பரீட்சை / பாடநெறி* | *புள்ளி அளவு* |
|---|---|
| க.பொ.த. (சாதாரண தரம்) சிறப்புச் சித்திக்கு | 02 |
| க.பொ.த. (உயர் தரம்) சாதாரண சித்திக்கு | 04 |
| க.பொ.த. (உயர் தரம்) சிறப்புச் சித்திக்கு | 06 |
| 06 மாதங்களுக்கு மேற்பட்ட இடைக்காலப் பாடநெறிக்கு | 08 |
| 06 மாதங்களுக்கு மேற்பட்ட முழுநேரப் பாடநெறிக்கு | 10 |
| இணைந்த மொழியில் (ஆங்கிலம்) பட்டத்தைப் பெற்றிருத்தல் (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றினால் பெற்றுக் கொண்ட பட்டம் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படும்.) | 10 |

4. **கணினி அறிவு :** அதிபட்சம் 10 புள்ளிகள்

| *பரீட்சை / பாடநெறி* | *புள்ளி அளவு* |
|---|---|
| க.பொ.த.(சாதாரண தரம்) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பாடங்களுக்கான திறமைச் சித்திக்கு | 05 |
| க.பொ.த.(உயர் தரம்) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பாடங்களுக்காக சாதாரண சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்திக்கு | 06 |
| 06 மாதங்களுக்கு மேற்பட்ட பாடநெறியின் இறுதியில் வழங்கப்படும் சான்றிதழ் / NVQ 03 அல்லது அதற்கு மேற்பட்ட தகைமைகள் | 10 |

- ➢ கணனிப் பாடநெறிக்கு புள்ளிகள் வழங்கும் போது, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம், பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனம் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மற்றும் வழங்கப்பட்ட நிறுவனத்தின் மேற்படி ஆணைக்கு ழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலத்தினுள் நிறைவு செய்யப்பட்டுள்ள பாட நெறிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படும்.

5. நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகளுக்கு - அதிபட்சம் 10 புள்ளிகள்

- ➢ ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறன்களுக்கு நேர்முகப் பரீட்சையின் போது குழுவினால் புள்ளி கள் வழங்கப்படும்.

**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2021 (2025) (முகாமைத்துவம் தொடர்பான மூன்றுமாத சான்றிதழ் பாடநெறி)**

இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க, மேற்படி பாடநெறி இல. 1930/12 மற்றும் 2015.09.01 ஆந் திகதிய ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் 2026, பெப்புருவரி மாதத்திலிருந்து வார இறுதி பாடநெறியாக 15 வாரங்கள் சனிக்கிழமைகளில் ஆரம்பித்து நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

02. (i) இப்பாடநெறி ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படுவதுடன், பாடநெறியின் இறுதியில் ஒவ்வொரு விடயம் சம்பந்தமாகவும் இறுதிப் பரீட்சை நடைபெறும், அப் பெறுபேறுகளின்படி பாடநெறியில் சித்தியடைவது தொடர்பாக தீர் மானிக்கப்படுவதுடன், சித்தியடைந்த விண்ணப் பதாரிகள் மேற்படி வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்படுவர். பாடநெறிக்கு அலுவலர்களை தேர்ந் தெடுத்தல், பாடநெறியை நெறிப்படுத்தல், பரீட்சை களை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளி யிடல், பாடநெறி சான்றிதழ்களை வெளியிடல் மற்றும் பாடநெறிக்கான சலுகைக் காலம் வழங்கல் சம்பந்தமாக அப்பீடத்தின் பீடாதிபதியினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பாடநெறியைத் தொடரும் அபேட்சகர்கள் கீழ்ப்படிதல் வேண்டும். இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத் தினால் விதிக்கப்படும் தண்டனை மற்றும் தாபனக் கோவையின் ஏற்பாடுகள் என்பனவற்றுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

(ii) ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் பாடநெறி ஆரம்பத்தில் குறித்த சட்டதிட்டங்கள் மற்றும் பாடநெறிகள் சம்பந்தமாக தங்களுக்கு அறிவிக்கப்படும்.

03. இப் பாடநெறி தொடர்பாக விண்ணப்பிப்பதற்கான மாதிரிப் படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம் மாதிரிப் படிவத்திற்கமைய பரீட்சார்த்திகள் தாமாகவே விண்ணப்பங்களைத் தயாரிக்க வேண்டியுள்ளதுடன், இலங்கை தொழில்நுட்ப சேவையைச் சார்ந்த மத்திய அரசாங்கத்தின் அலுவலர் ஒருவராயின், தமது திணைக்களத்தின் தலைவர் ஊடாகவும், இலங்கை தொழில்நுட்ப சேவையைச் சார்ந்த மாகாண அரசாங்கத்தின் அலுவலர் ஒருவராயின், அவர்கள் சேவையாற்றுகின்ற மாகாண சபையின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும், 2025, திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பணிப்பாளர் (விஞ்ஞான, கட்டிடக்கலை மற்றும் தொழில்நுட்ப சேவைகள்) பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 எனும் முகவரிக்கு தனது விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில், "இலங்கை தொழில்நுட்ப சேவையின் 1 ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2021 (2025)" (முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத சான்றிதழ் பாடநெறி) என குறிப்பிடபபடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை எவ்வித விசாரணையுமின்றி நிராகரிப்பதற்கு பீடாதிபதிக்கு அதிகாரமுண்டு.

04. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தின் பீடாதிபதி திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றை பாடநெறியின் ஆரம்பத்தில் அல்லது பாடநெறி கால எல்லையினுள் முன்னளித்து ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பதாரர்கள் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

(அ) தேசிய ஆளடையாள அட்டை;

(ஆ) தமது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கடமை அடையாள அட்டை.

அல்லது

தமது நிறுவனத்தினால் வழங்கபட்ட ஆளடை யாளத்தை உறுதிசெய்யக்கூடிய ஆவணம்.

04. **விண்ணப்பம் :**

i. A4 அளவுடைய கடதாசியில் விண்ணப்பம் தயாரிக் கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை டைப் செய்து தயாரித்துக் கொள்ள முடியுமாக இருந்த போதிலும், அது சரியாகவும் நேர்த்தியாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தினாலேயே நிரப்பப்படல் வேண்டும். விசேடமாக குறிப்பிடப் பட்டுள்ள இடங்களில் மாத்திரம் விசேடமாக குறிப் பிடப்பட்டுள்ள மொழியில் நிரப்புதல் வேண்டும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அலு வலர்களின் பெயர் பாடநெறியின் சகல சந்தரப் பங்களிலும் பயன்படுத்தப்படுவதன் காரணமாக அது தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல்

வேண்டும். ஏதேனும் ஒரு வகையில் பாடநெறிக் காலத்தினுள் அதில் மாற்றமேற்படும் பட்சத்தில், அது பற்றி திணைக்களத் தலைவரின் சிபாரிசுடன் எழுத்துமூலம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பீடாதிபதி, முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

ii. விண்ணப்பம் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள மொழிமூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்திராத விண்ணப் பங்களும், முழுமையாக தக வல்கள் வழங்கப்படாத விண்ணப்பங்களும் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியினால் பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பமானது, அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தினை ஒத்திருக்கின்ற தாக என்பது பற்றி விண்ணப்பதாரி பரிசோதித்துப் பார்க்க வேண்டியுள்ளதுடன், அவ் விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

iii. விண்ணப்பதாரியினால அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட தபால் முத்திரை அளவிலான 2 வர்ணப் புகைப்படங்களை அனுப்புதல் வேண்டும். அதன் ஒரு பிரதியை விண்ணப்பத்தின் முன்பக்கத்தில் வலது பக்க மேல் மூலையில் தரப்பட்டுள்ள கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும். அத்துடன், மற்றைய புகைப்படத்தை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**06. பாடநெறிக் கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணம் :**

i. வெற்றிகரமான விண்ணப்பதாரர்களின் விண்ணப் பப்படிவங்கள் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பித்த பின்னர் கற்கை நெறிக் கட்டணங்களை செலுத்த வேண்டிய முறை தொடர்பாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தின் பீடாதிபதியினால் விண்ணப்ப தாரர்களை அறிவுறுத்துவது செய்யப்படும்.

ii. பாடநெறி கட்டணம் ரூபா 24,000.00 ஆகும். அதில் தாபன கட்டணங்கள், அச்சுக் கட்டணங்கள் பரீட்சைக் கட்டணங்கள், வளவாளர்களுக்கான கட்டணங்கள், ஒருங்கிணைப்புக் கட்டணங்கள் ஆகியன உள்ளடங்குகின்றன. விண்ணப்பதாரி பணியாற்றுகின்ற நிறுவனத்தின் மூலம் பண மாகவோ, காசோலையாகவோ அல்லது வங்கி வரைவாகவோ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத் தின் மூலம் விண்ணப்பதாரியிடம் வழங்கப்படும் ஆலோசனைகளின் பிரகாரம் உரிய வங்கிக் கணக்கில் கற்கைநெறிக் கட்டணத்தை வைப்பிடல் வேண்டும்.

iii. ஆரம்பத்தில் பாடநெறிக்கு உரிய பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில், அதன் பின்னராக தவணைகளில் அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றும் போது, அதற்காக பதிவுக் கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணங்களை செலுத்துதல் வேண்டும் என்பதுடன், அவ் கட்டணங்கள் செலுத்துவது தொடர்பில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடாதி பதியின் ஆலோசனைகளுக்கமைவாக செயற் படுதல் வேண்டும்.

iv. எச்சந்தர்ப்பத்திலும் இப்பாடநெறிக்காக அறவிடப் பட்ட தொகை மீளளிக்கப்படமாட்டாது. இப் பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சை அல்லது பாடநெறி தொடர் பாகவோ வேறொரு அலுவலருக்கோ மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**07. பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் :**

i. இலங்கை தொழில்நுட்பசேவையின் I ஆம் தரத் திற்கு பதவியுயர்த்தப்பட்டு ஐந்து (05) ஆண்டுகளை கடப்பதற்கு முன்னர் சகல அலுவலர்களும் இலங்கை தொழில்நுட்ப சேவையின் I தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான மூன்றாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : திணைக்களத் தலைவரினால் அந்தந்த அலுவலர்களின் சேவைமூப்பு மற்றும் மேற்படி 07 i இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக தமது அவதானத்தை செலுத்த வேண்டும்.

**08. பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கும் முறை :**

மேற்படி 07.1 இல் குறிப்பிடப்படும் தகைமை களையுடைய உத்தியோகத்தர்களின் சேவை மூப்பின் ஒழுங்குமுறைக்கமைய, பாடநெறிக்காக அலுவலர் களைத் தேர்ந்தெடுக்கும் போது முன்னுரிமையளிக் கப்படும்.

09. கற்கைநெறிக்காக தெரிவு செய்யப்படும் சகல அலுவலர் களினதும் விபரங்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் பேணப்பட்டு வருகின்ற தரவு முறைமையினுள் உள்வாங்கப்படுவதுடன், குறைந்தபட்சம் 150 மற்றும் அதிகபட்சம் 400 உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழு மாத்திரம் இப்பாடநெறியில் இணைத்துக் கொள்ளபபடவுள்ளனர். பாடநெறிக்கு தெரிவு செய்யப் பட்ட விண்ணப்பதாரிகளின் பெயர்ப் பட்டியல் பொது

நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் தெரிவு செய்யப்படும் அலுவலர்களுக்கு அது பற்றி அறிவிக்கப்படும். அவ்வாறு அறிவிக்கப்பட்டதன் பின்னர் கலந்து கொள்ளாத விண்ணப்பதாரிகளிடமிருந்து மீண்டும் விசாரிப்பதற்கு ஸ்ரீ ஜயர்வத்தனபுர பல்கலைக்கழகம் அல்லது பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு கடப்பாடு இல்லை என்பதுடன், அது அலுவலர்களுக்கு கற்கைநெறிக்கு பங்குபற்றுவதற்கு உரித்தான ஒரு சந்தர்ப்பம் என்ற வகையில் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

10. பாடநெறி தொடர்பான பாடத்திட்டம் :

| *தொடர் இல.* | *பாடத்திட்டம்* | *கிரடிட் எண்ணிக்கை* | *கிரடிட் மணி.* |
|---|---|---|---|
| 01 | அரசாங்க நிதி முகாமைத்துவம் | 02 | 30 |
| 02 | மனிதவள முகாமைத்துவம் (மூலக் கோட்பாடு) | 02 | 30 |
| 03 | பிரச்சினை தீர்த்தல் முகாமைத்துவம் (நிறுவகத்தின் நோக்கங்கள், குறிக் கோள்களை அடைந்துகொள்ளும் போதான பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் கோட்பாடுகளின் நடை முறைப் பயன்பாடு) | 02 | 30 |
| 04 | நிறுவன நடத்தை | 02 | 30 |
| 05 | செயற்திட்ட அறிக்கை தத்தமது தொழிற்துறை சம்பந்தமாக முகங்கொடுக்க நேரிடுகின்ற பிரச்சினை அல்லது தொழிற்துறை தொடர்பான ஆய்வுக் கட்டுரை | 02 | 30 |
| | | **10** | **150** |

11. இவ் அறிவித்தலின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்படாத எவ்வித விடயம் சம்பந்தமாகவும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் தீர்ப்பே இறுதியானதாகும்.

12. இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பதங்களிடையே ஏதேனும் இணக்கப்பாடின்மை நிலவுகின்றதாயின் சிங்கள மொழிப் பதமே சரியானதாக அமைந்திருக்கும்.

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2025, ஒற்றோபர் 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| தபால் முத்திரை அளவிலான புகைப்படம் இங்கு ஒட்டவும். |
|---|

| |
|---|

(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கை தொழிநுட்ப சேவையின் I ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2021 (2025) (முகாமைத்துவம் தொடர்பான மூன்றுமாத சான்றிதழ் பாடநெறி)**

**Third Efficiency Bar Examination for the Officers in Grade I of Sri Lanka Technological Service - 2021(2025) (Three Months Certificate Course on Management)**

01. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் :
...................................................................
...................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
(உதா - GUNAWARDHANA, H.M.S.K)

(ஆ) முழுப்பெயர் :
...................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் :
(சிங்களத்தில்/ தமிழில்)
...................................................................

02. தாங்கள் மாகாண அரசாங்க சேவை அல்லது எவ்வித அரசாங்க சேவைக்கு உட்படுகின்றீர்கள் என்பது பற்றி உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக. ☐

(அரசாங்க சேவை - 10/ மேல் மாகாண அரசாங்க சேவை - 01/ மத்திய மாகாண அரசாங்க சேவை - 02/ தென்மாகாண அரசாங்க சேவை - 03/ வடமாகாண அரசாங்க சேவை - 04/ கிழக்கு மாகாண அரசாங்க சேவை - 05/ வடமேல் மாகாண மாகாண அரசாங்க சேவை - 06/ வடமத்திய மாகாண அரசாங்க சேவை - 07/ஊவா மாகாண அரசாங்க சேவை - 08/சப்ரகமுவ மாகாண அரசாங்க சேவை - 09)

03. பதவிப் பெயர் : ..................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

04. தாங்கள் பணியாற்றுகின்ற உப திணைக்களம்/ பிரிவு :
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) .....................
...................................................................
(சிங்களத்தில்/ தமிழில்) .........................................
...................................................................

05. தாங்கள் பணியாற்றுகின்ற திணைக்களம் :
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) .....................
.......................................................................................
(சிங்களத்தில்/ தமிழில்) .........................................
.......................................................................................

06. அரசாங்க முகவரி :
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) .....................
.......................................................................................
(சிங்களத்தில்/ தமிழில்) .........................................
.......................................................................................

07. தனிப்பட்ட முகவரி :
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) .....................
.......................................................................................
(சிங்களத்தில்/ தமிழில்) .........................................
.......................................................................................
ii. வசிக்கும் மாவட்டம் :
.......................................................................................

08. மின்னஞ்சல் : .................................................................

09. தொலைபேசி இலக்கம் :
தனிப்பட்ட

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

அலுவலக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

10. பால்நிலை
ஆண் - M
பெண் - F ☐
(குறித்த எழுத்தை கூட்டினுள் எழுதுக)

11. (i) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

(தங்களால் சத்திய பிரதியென உறுதிப்படுத்தப்பட்ட தேசிய ஆளடையாள அட்டையின் பிரதியொன்றை இணைக்கவும்.)

(ii) பிறந்த திகதி:

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி: ☐☐

12. (i) தரம் I இற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதி :

ஆண்டு : ☐☐ மாதம் : ☐☐ திகதி: ☐☐

(ii) 24.12.2025 ஆந் திகதியன்று தரம் I இல் முனைப்புடனான சேவைக்காலம்:

ஆண்டு : ☐☐ மாதம் : ☐☐ நாள் : ☐☐

(சான்றுப்படுத்திய பிரதியென அங்கீகார ஒப்பமிடப்பட்ட I ஆம் தரத்திற்கு தமுயர்த்தப்பட்ட கடிதத்தின் பிரதியை இணைக்கவும்.)

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து தகவல்களும் சரியானவை எனவும் மேலும், பாடநெறியை நெறிப்படுத்தல், பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல், பாடநெறி சம்பந்தமாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பிரிவின் பீடாதிபதியினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும், தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படுவேன் எனவும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உறுதியுரைக்கின்றேன்.

திகதி:.................. ..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தில் திரு./ திருமதி/ செல்வி ............. ......................... சேவையாற்றுகின்றார் எனவும், நான் அவரை தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும், .................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:.................. ..............................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ முத்திரை.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

மேலே இல. 01 இலிருந்து 12 வரையிலான பந்திகளில் அடங்கியுள்ள தகவல்கள் சரியானவை எனவும், 07 ஆம் பந்தியின் குறிப்புக்களுக்கு அமைய மற்றும் 08, 09 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு கீழ்ப்படிந்தும் அப்பரீட்சார்த்தி இப் பாடநெறியில் கலந்து கொள்வதற்கு தகைமை பெற்ற இலங்கை தொழிநுட்ப சேவையைச் சேர்ந்த அலுவலர் எனவும், உரிய பாடநெறிக் கட்டணம் திணைக்களத்தினால் செலுத்தப்படும் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

திகதி:.................. ..............................................
திணைக்களத் தலைவரின்
கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ முத்திரை.

**சரிபார்க்கவும் :**

1. தங்களால் சத்திய பிரதியென உறுதிப் படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது. ☐
2. தங்களால் சத்திய பிரதியென உறுதிப் படுத்தப்பட்ட தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது. ☐
3. முத்திரை அளவிலான புகைப்படப் பிரதி விண்ணப்பத்தின் வலதுபக்க மேல்மூலையில் ஒட்டப்பட்டுள்ளது. ☐
4. முத்திரை அளவிலான புகைப்படப் பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ☐
5. தம்மால் உண்மைப் பிரதியென சான்றுப் படுத்திய I ஆம் தரத்திற்கு தரம் உயர்த்தப்பட்ட கடிதத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது. அங்கீகார ஒப்பமிடப்பட்ட ☐

10-294